මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

LAE\2023\ 28 2023.01.31

**உள்ளூரதிகார சபைகள் தேர்தல் - 2023**
**உடற்றகுதியீனம் உள்ளவர்கள் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பித்தல்**

2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்திய) சட்டத்தின் பிரதான முதன்மைச் சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ள 82எ4 (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உடற்றகுதியீனம் காரணமாக ஏவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொதுப் போக்குவரத்து சேவையிலோ வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய் வர முடியாதவராக விருந்தால், தான் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய் வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேட்பாளரொருவரல்லாத வேறொருவரோ விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

இவ்வசதியினைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தினை வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு 7 நாட்களுக்கு முன்னதாக ,அதாவது 2023.03.02 ஆந் தேதி அல்லது அதற்கு முன்னதாக உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவிக்குமாறு சமர்ப்பித்தல் சட்டமுறையான தேவையொன்றாகும் என்பதோடு, தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைந்தால் இந்நோக்கத்திற்கென அந்நபருக்கு விசேட போக்குவரத்து வசதியினைப் பெற்றுக் கொள்ளவதற்கு அனுமதிப் பத்திரமொன்றை விநியோக்கிக்கலாம்.

விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் நபர் நடந்து அல்லது பொது வாகனங்களில் போக முடியாதவாறு உடற்றகுதியீனமுற்றிருப்பதன் தன்மையை விபரித்து (மேல்நாட்டு அல்லது உள்நாட்டு) பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திரமொன்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவாரெனில், அதற்கான முடிவை மேற்கொள்ள தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உதவியாகவிருக்கும். தன்னைப் பரிசோதித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் ஒருவர் அரசாங்க வைத்தியரிடம் /பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியரொருவரிடம் அல்லது ஆயுர்வேத வைத்தியரிடம் விண்ணப்பிக்குமிடத்து அவர் அவ்வைத்திய அறிக்கையினைக் கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம். தனியார் (மேல்நாட்டு அல்லது உள்நாட்டு) வைத்தியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

இவ்வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்கத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை 2023.03.02 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு உரிய தேர்தற் பிரதேசத்தின் (உள்ளூரதிகார சபை) தெரிவத்தாட்சி அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.**

**உள்ளூரதிகார சபைகள் தேர்தல் - 2023**

**உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்)**

**84எ4(ஈ) ஆம் பிரிவின் கீழ் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்கென உடற்றகுதியீனமுற்றுள்ள ஒருவரினால் அனுமதிப் பத்திரமொன்றிற்காகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்.**

……………………………….. சபையின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு

(1) உடற்றகுதியீனம் உள்ளவரின் விபரங்கள்:

(அ) முழுப் பெயர்: …………………………………………………………………

(ஆ) அஞ்சல் முகவரி: …………………………………………………………….....

…………………………………………………………………………………...

…………………………………………………………………………………...

(இ) தேருநர் இடாப்பிலுள்ளவாறு உள்ளூரதிகார சபை:
வாக்கெடுப்பு மாவட்டம் மற்றும் தொடர் இலக்கம் (தெரியுமாயின்) ………….

…………………………………………………………………………………..

(2) உடற்றகுதியீனம் பற்றிய சுருக்கமான ஒரு விபரம்:……………………………………

…………………………………………………………………………………………

(3) உடற்றகுதியீனமுற்றவர் சார்பாக வேறெவாருவர் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பாராயின் அவரது பெயரும் முகவரியும்: ……………………

…………………………………………………………………………..

…………………………………………………………………………..

(4) இவ்விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியர் ஒருவரின் / பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரின் / ஆயர்வேத வைத்தியரொருவரின் / தனியார் வைத்தியரொருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் இணைத்தனுப்புகின்றேன்.

வைத்தியரின் பெயர்: ……………………………………………………………

பதிவிலக்கம்: ………………………………………………………………………

(5) மேலே 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு உடற்றகுதியீனம் காரணமாக எனக்கு / உடற்றகுதியீனமுற்றுள்ள மேலே பெயர் காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவை எதனிலும் ஏற்பாடு செய்யப்பட்ட போக்குவரத்து வசதி மூலம் வாக்களிக்கப் போக முடியாதென்பதை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

(6) மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின் போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய் வருவதற்கென நான் / உடற்றகுதியீனமுற்ற மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதேனுமொரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக் கொள்கின்றேன்.

…………………………………………

உடற்றகுதியீனமானவரின்/அவருக்காக விண்ணப்பிக்கும் வேறொருவரின் கையெப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்

திகதி:……………………..